RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# செம்மீன் நாவல் வெளிப்படுத்தும் பரதவர் வாழ்வியல்

ஆ. மீரா [அ] *, ந. இரமாபிரபா [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் -642126, தமிழ்நாடு, இந்தியா

# The Life of the Parathavar Fishing Community in Chemmeen

A. Meera [a, *], N. Ramaprabha [a]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet-642126, Tamil Nadu, India

*Corresponding Author: meerakarthi31@gmail.com

**ABSTRACT**

Literature has, across different periods, served as a powerful medium for documenting the lives, experiences, and social realities of people. Literary works not only illuminate individual lives but also provide valuable insights into the structure, values, and challenges of society. In this context, the novel *Chemmeen* occupies a significant place as a realistic portrayal of the fishing community, whose members have faced numerous social, economic, and cultural challenges over time. The novel vividly depicts the everyday life of the Parathavar fishing community, portraying their close relationship with the sea, their traditional occupations, cultural beliefs, family relationships, and the hardships associated with their livelihood. It also explores the emotional, social, and economic struggles that shape the lives of the fisherfolk, highlighting the influence of customs, community traditions, and environmental conditions on their existence. This article examines the lifestyle of the Parathavar community as represented in *Chemmeen*, focusing on the various circumstances, customs, occupations, and lived experiences portrayed in the novel. Through this analysis, the study demonstrates how *Chemmeen* serves as an important literary record of the cultural heritage and social realities of the fishing community.

**Keywords:** Chemmeen, Parathavar, Fishing Community, Traditional Occupations

## முன்னுரை

இலக்கியங்கள் காலந்தோறும் மக்களின் வாழ்வியலை பறைசாற்றும் களமாக விளங்குகின்றன. தனிமனித வாழ்வியலையும் சமூகத்தையும் அறிந்து கொள்ளவும் இலக்கியங்கள் துணைநிற்கின்றன. அந்த வகையில் காலந்தோறும் பல வாழ்வியல் சிக்கல்களைச் சந்தித்துவரும் மீனவர் சமூகத்தின் நிலையை எடுத்துரைக்கும் புதினமாக செம்மீன் புதினம் விளங்குகின்றது. இப்புதினத்தில் இடம்பெறும் மீனவ மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிகழும் பல்வேறு சூழல்கைளை எடுத்துரைப்பததாக இக்கட்டுரை அமைகின்றது.

## செம்மீன் - பெயர்க்காரணம்

கதையின் தலைப்பானது கதைமாந்தர்கள், காலப்பிண்ணணி, இடம், கதை நிகழ்வு இவற்றைப் பொருந்தே அமையப் பெறுகிறது. செம்மீன் புதினத்தின் கதை நிகழ்வில் ‘செம்மீன்’ என்ற ஒரு வகை மீனினைப் பற்றிய குறிப்பு காணப்பட்டாலும் கற்பின் அடையாளமாக இப்பெயர் வைத்துள்ளார்.[1]

‘செம்மீன் - அருந்ததி’ எனப் பெருள். இவற்றுள் அருந்ததி என்பதற்கு ‘அருந்ததி காட்டுதல் - அருந்ததி போலக் கற்புடையவள் ஆகுக என்று அந்நட்சத்திரத்தை மணமகட்குக் காட்டுதல்’ எனப் பொருள் தருகிறது.[2]

## வணிகம்

மாந்தர் தம் பொருளாதாரச் செயற்பாட்டினால் தனது தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு நடைபெறுவது வணிகம். தினமும் கடலுக்குச் சென்றுப் பிடித்துவரும் மீன்களைச் சந்தையில் விற்றுக் கிடைக்கும் இலாபத்தை வைத்தே மீனவர்கள் தங்கள் வாழ்வியலை நடத்தி வருகின்றனர். மீன் சந்தையில் மீன்களை ஓரே விலைக்கு யாரும் வாங்குவதில்லை. ஒருமுறை மீன்களின் விலை சரிந்துவிட்டாலும் அங்குள்ள மீனவர்களின் பொருளாதாரம் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது. இந்நிலைக்குக் காரணமாக, அருகிலுள்ள கொழும்பு, ஆழப்புழைச் சார்ந்த துறைமுகத்தில் உள்ளோர் மீனை முழுவதுமாக ஏற்றுமதி வியாபாரமாக்கி விடுகின்றனர். இது குறித்த பதிவினை,

“மார்க்கெட்டில் மீனின் விலை சரிந்து விட்டது. கடற்கரையில் செம்பன்குஞ்சுவும், பிறகும் கவலையில் ஆழ்ந்தனர். ஆனால் சில நாட்களிலேயே நிலைமை மாறிவிட்டது. கொச்சியிலும் ஆலப்புழையிலும் ஏற்றுமதி வியாபாரம் நடந்தது. ரங்கூனில் விலை விழுந்துவிட்டது என்றும் பேசிக்கொண்டனர். சரிபாதி விலைதான் கிடைக்கிறது என்று ஸேட்டுக்கள் குறைப்பட்டுக் கொண்டிருந்தனர். அதோடு ஒரு கப்பல் வேறு மூழ்கி விட்டதாம். ஆகமொத்தம் தொகையில் பாதிக்குத்தான் எல்லோருக்கும் கணக்கு முடித்துக் கொடுத்தனர்”[3]

என்ற வரிகளின் வாயிலாக உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கப் பெறாத அம்மக்களின் வாழ்வை இப்புதினம் எடுத்துக் காட்டுகிறது. சிறு வயது முதலே உழைத்துப் பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இக்கதை மாந்தர்கள் உள்ளனர். அதன்பயனே கறுத்தம்மாவின் உழைப்பு, அவள் திருமணமான பிறகு குடும்பத்தின் வறுமையைப் போக்க மீன்விற்கச் செல்கின்றாள். பெற்றோரை நம்பாது கடல் அன்னை உள்ளாள் என்ற நம்பிக்கையில் பொருளீட்டச் செல்கிறாள். இவற்றை,

“அணாவுக்கு இரண்டு மீன் என்று வியாபாரம் செய்தனர். கறுத்தம்மா இரண்டணாவுக்கு ஐந்து மீன் கொடுத்தாள். இதனால் லாபம் சற்றுக் குறைவுதான் என்றாலும் நிரந்தர வாடிக்கை நிறையக் கிடைத்தது அவர்கள் மறுநாளும் மீன் கொண்டுவர வேண்டும் என்று அவனிடம் கேட்டுக் கொண்டனர் புதிய மரக்காத்தி மிகவும் நல்லவள் என்று பெயர் கிடைத்துவிட்டது” [4] இவ்வரிகளின் வாயிலாக பெண்களும் வணிகத்தில் ஈடுபட்டதனை அறிந்து கொள்ள முடிகிறது.

## செம்மீன் - காட்டும் பெண்களின் நிலை

சமுதாயத்தின் பெண்நிலை எவ்வாறுள்ளது என்பதை காலந்தோறும் இலக்கியங்கள் பதிவு செய்துகொண்டுதான் வருகின்றன. தாய், மகள், அண்டை வீட்டார், அலுவலகத்தில், அதிகாரத்தில் போன்ற இடங்களில் தனக்குரிய உரிமையை விட்டுக் கொடுக்காது, போராடி முன்னேறும் பெண்களை இலக்கியம் படைப்புகள் அடையாளம் காட்டுகின்றன.

“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல

மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” [5]

என்பார் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை. இப்பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் பண்டைய இலக்கியந்தொட்டு அறிய வந்தாலும் நவீன காலத்தில் படைப்பாளர்களால் ஏற்றம் பெற்று வரும் நிலையும் குறிக்கத் தகுந்தது. கட்டுப்பாடுகள் திணிக்கப்பட்டாலும் தவறிழைக்காது ஒழுக்கம் போற்றும் பெண்களையே இப்புதினம் வரவேற்கிறது. பிறந்த வீட்டிலிருக்கும் நடை, உடை, பாவனைகள் புகுந்த வீட்டில் மாற்றம் ஏற்படக்கூடும். இவற்றினுள் வரதட்சனை கொடுக்காமல் வந்த மணப்பெண்ணாக இருந்தால் ஊராரின் தூற்றம் மொழி கேட்டு அப்பெண்ணின் இயல்புநிலை

பாதிக்கப்பட்டு நிம்மதி இழக்கும் சூழலை, “ஊரிலுள்ள பெண்கள் எல்லோரும் கூடி உட்கார்ந்து கொண்டு புதுப்பெண்ணைப் பற்றிப் பேசிக்கொண்டனர் ...... அவ அப்பனுக்குத் தோணியும், வலையும் இல்லேனு நினைக்கிறேன். எனக்குத் தோணுது அதாவது அந்தப் பொண்ணு கெட்ட பேரு வாங்கியிருக்கும். அப்படித்தான் இருக்கணும்” [6]

எனத் தானும் வேறு இடத்திலிருந்து புகுந்த வீட்டிற்கு வந்தவர்கள்தான் என்ற உணர்விழந்து பெண்ணைப் பெண்களே அவதூறு பேசும் நிலையினைச் செம்மீன் புதினம் பதிவு செய்துள்ளது. கணவன் மனைவியாக இணைந்து நல்ல, அமைதியின் புரிதல் கொண்ட வாழ்க்கை அனைவருக்கும் அமையும் என்று கூற இயலாது. சமூகத்தில் பெண்ணாகப் பிறந்து தவறான பழக்கவழக்கம் உடைய ஆண்களுக்கிடையே வாழ்வது என்பது கடினமான ஒன்று. இதனை, “உலகில் சிலர்தான் வாழப் பிறக்கிறார்கள் அவர்களில் ஒருவனின் மனைவியாகும் பாக்கியம் பெற்றவள் அதிருஷ்டசாலிதான் தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தை பெண்ணாய் இருக்கக் கூடாதா என்று மனமிருகப் பிராத்தித்தாள் கறுத்தம்மா. பெண் ஜென்மம் எடுத்துப் படாதபாடு பட்டுவிட்டாள் அவள். போதும், பிறக்கப்போகிற குழந்தையும் பெண்ணாகப் பிறந்துவிட்டால் நடந்து போன விஷயங்கள் எல்லாம் மீண்டும் அவளுடைய வாழ்விலும் நடைபெறா என்பது என்ன நிச்சயம்? அப்படியே பிறக்கிற குழந்தை பெண்ணாகப் பிறந்துவிட்டாலும் அந்தக் குழந்தையை எந்த ஆண் குழந்தையுடனும் பழகவிடமாட்டாள் அவள்” [7]

திருமணத்திற்கு முன் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஒருவர் மற்றொருவர் மீது விருப்பம் கொள்ளும் வாய்ப்பு ஏற்படத்தான் கூடும். அதற்கு அவர்கள் கற்பினை இழந்தவர்களாகி விட முடியாது. ஆனாலும் திருமணத்திற்குப் பிறகு தெரியவரும் போது அவர்களை அக்காதலைப் பற்றிக்கூறி இழிவாகப் பேசும் சூழல் சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இதனை, “ பரீக்குட்டி சிறு வயதில் அவளுடைய தோழனாக இருந்தான் என்பதற்கு மேலாக ஏதாவது ரகசியம் உண்டோ என்று திரும்பத் திரும்பக் கேட்டான். அதற்கு அவள் சொன்ன பதிலெல்லாம் தான் கெட்டுப்போகவில்லை என்பதுதான். அதுமட்டும் தெரிந்தால் போதாது பழனிக்கு,

அவன் கேட்டான்

நீ அவன் மேல ஆசை வைச்சிருந்தியா?

இனிமேலும் மூடி மறைந்துக் கொண்டு

இருப்பதில் என்ன வாபம் இருக்கிறது. நீ குற்றவாளி அல்ல. கல்யாணத்திற்கு முன் நீ ஒருவனிடம் காதல் கொண்டிருந்தாய். இதில் தவறு என் இருக்கிறது?

ஆசை வெச்சிருந்தேன்

அப்போது அந்த அறைக்குள் சவ அமைதி நிலவியது

சாதாரணமாக ஒரு பெண் திருமணச் சடங்கின் போது, உதடு அசையாமல் ஓசைப் படாமல் வழங்கும் வாக்குறுதிகள் அவை” [8]

என ஒரு பெண்ணின் மன விருப்பத்தை யாரும் கேட்டு நிறைவேற்றுவதில்லை என்பதனை வெளிப்படுத்திகிறார். திருமண பந்தத்தில் மட்டுமல்ல தொழிற்திறன் மிக்கு இருந்தாலும் அவ்விடத்தில் பெண்களின் அவலத்தில் மாற்றம் இல்லை.

## ஆணாதிக்கம்

புதினங்களின் பல்வேறு கலாச்சாரத்தின் சமூகம், அரசியல், சட்டம், மதம், பொருளாதாரம் போன்ற அடிப்படையில் ஆணாதிக்கம் தன்னை வெளிப்படுத்துகிறது. வரலாற்று ரீதியாக குடும்பத்தின் தலைவன் ஆண் என்ற ஆதிகார ஆட்சியைக் குறிப்பிட்டிருப்பின் நாளடைவில் பொருளாதார அமைவினால் பெண் - ஆண் என மாற்றம் கண்டது. பெண்கள் வீட்டைப் பராமரிக்கும் பொறுப்பிற்குச் சொந்தக்காரர்கள். இருப்பினும் இல்லத்தின் பொருளாதாரம் வளரப் பெண்களுக்கும் வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டுவருவதை சங்ககாலம் முதல் இன்றுவரை காணக் கிடைக்கிறது. பிறந்த

வீட்டில் தன் தாய் இறந்த செய்திக் கேட்டு கறுத்தம்மா அங்கு செல்வதற்கு கணவன் பழனியிடம் அனுமதி கேட்கிறாள். ஆயின், முன்னர் தன்னை வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கச் சொன்னதற்கு மறுத்துவிட்டு அதன் காரணமாகவே மனைவியை அவள் தாய் இறப்பிற்குச் செல்ல மறுக்கிறான். இதனை,

"கடல் தாய் சத்தியமாச் சொல்கிறேன். நான் வீட்டைவிட்டு வருறதுக்குந் தயங்கிக்கிட்டு நின்னப்போ, அம்மாதான் போன்னு சொல்லி அனுப்பி வைச்சாங்க. போயிட்டு வந்துடுவோம். அவனது கால்களில் விழுந்து கெஞ்சினாள் அவள். அவனோ சிலைபோல் நின்று கொண்டிருந்தான்."[9]

என்று தாயின் இறப்பிற்குக் கூட ஒரு பெண்ணைச் செல்லவிடாது அவமதிக்கும் ஆணாதிக்கச் சிந்தனை இங்கு வெளிப்படுத்துகிறது.

## வறுமை

மனிதர்கள் தாம் வாழ்வதற்கு உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் அடிப்படையான தேவைகள். இவற்றின் ஒன்று கூடத் தன் தேவைக்குக் கிடைக்காதபோது வறுமை உச்சகட்டம் பெறுகிறது. தேவைக்கு அல்லது தேவைக்கு மீறி இவை கிடைக்கப்பெற்றாலும் பலவித போராட்டங்களை மீறிப் பிறரால் அச்சுறுத்தலாலும் அதிகாரத்தாலும் பறிக்கப்படுவதுண்டு. இவை 19-ஆம் நூற்றாண்டு காலந்தொட்டு நவீன - இலக்கியம் வரை படைப்பாளர்களால் வெளிக்காட்டப்படுகிறது.

மாந்தர்கள் பொருளாதாரச் செயற்பாட்டினால் தனது தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு நடைபெறுவது வணிகம். செம்மீன் புதினத்தில் செம்பன்குஞ்சு என்பவன் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தோணி வாங்குவதற்குச் சிறுகச் சிறுக சேமித்து வருகிறான். இவனது சேமிப்பைக் கண்ட மகள் கறுத்தம்மா கடற்கரையில் சில வேலைகளைச் செய்து தனது பங்களிப்பையும் அளிக்க நினைக்கிறாள் இதனை,

"நாலைந்து வயதான ஒரு சிறுமி அந்தக் கடற்கரையில் கிளிஞ்சல் பொறுக்கியும் தோணிக்குள் வலையை உதறுகையில் வெளிச்சிதறி விழும் குஞ்சு மீன்களைப் பொறுக்கியும் திரிந்த காலத்தில், அந்தச் சிறுமிக்கு ஒரு தோழன் கிடைத்தான்"[10] என்பதன் வழி வயது பாராமல் வறுமை நீங்க உழைக்கும் மீனவர் சமுதாயத்தையும் காண முடிகிறது.

## சாதி - மத வேறுபாடு

மனிதர்கள் காடுகள், மலைகளில் வாழ்ந்த தன் சிந்தனைக்கு அப்பாற்பட்டு தனி மனிதனாக அலைந்து திரிந்தனர். பின், தனி மனிதர்கள் பலர் ஒன்று கூடிச் சமூகமாக வாழ முற்பட்டனர். நாளடைவில் நாகரிகம், பண்பாடு வளர்ச்சியில் எண்ணங்களின் பரிமாற்றத்தின் கீழ் ஆட்பட்டு வாழ்வதற்கான சில தொழில்களைப் பயன்படுத்திக் கொண்டனர். பரந்த நிலப்பரப்பில் தங்களுக்கெனத் தேவைகளைப் பூர்த்தி செய்து நம்பிக்கையினிடத்து சில பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கலாயினர்.

சமூகத்தில் கருத்துக்களின் பரிமாற்றத்தினால் தனக்கென உறவுகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள் உரிமையை நிலைநாட்டும் பொருட்டு சாதி என்ற அமைப்பினால் பிரிவினைவாதம் உண்டாயிற்று.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ்கூறு நல்லுலகம்"[11]

எனத் தொல்காப்பியப் பாயிரத்தின் வழி செந்தமிழ், கொடுந்தமிழ் இதுவே, பழங்காலத்துத் தமிழகமாக இருக்கத்தெரிகிறது. இடத்திற்கு இடம் வேறுபடும் பேச்சுத்தமிழ் மலையாளத்தில்,

“மலையாளமும் இடவகையால் தென் கேரளம், மத்திய கேரளம், வட கேரளம் எனப் பேச்சு நிலையில் வேறுப்படுகிறது வட்டார மொழிகளேயன்றிச் சாதி, சமய வேறுபாட்டை ஒட்டியும், நம்பூதிரி, நாயர், மாப்பிளா, புலையா, நசராணி என இனத்தையொட்டியும் திரிபு பெற்றுள்ளது” [12]

எனச் சாதியப் பிரிவினைக்கு ஏற்ப பேச்சுத்தமிழ் வேறுபடுவதனை ரா.சீனிவாசன் குறிப்பிடுகிறார். பழங்காலந்தொட்டு சமூகத்தில் பின்பற்றப்படும் சாதி, மதக் கொள்கை மனிதனை மனிதனாக காணாமல் சமயத்தின் அடிப்படையிலேயே காணப்படுகின்றனர்.

மீனவ மக்களில் வாழ்வியலும் இச்சாதி சமய பிரச்சனைகள் பின்பற்றப்பட்டதனை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். பழனி என்பவன் தான் என்ன சாதி என்று அறியாது கடலிலே தனியாக உழைத்து வருபவன். இவனின் உழைப்பைக் கண்டு செம்பன்குஞ்சு தன் மகள் கறுத்தம்மாவிற்கு மணமுடிக்க எண்ணுகின்றான் ஆனால் செம்பன்குஞ்சு மனைவி ஊரார் பழிக்கு ஆளாகி விடுவோமோ என அஞ்சி அவனது சாதியைத் தெரிந்து கொள்ள முற்படுகிறாள். இதனை,

“பெண்ணை யாருக்குத் கட்டிக் கொடுத்தீங்கன்னு கேக்கறவங்ககிட்டே என் பதில் சொல்ல முடியும்? அவன் சொந்தமா ஒரு வீடு வெச்சுக்கிடுவான் என்று சமாதானம் சொன்னான். எல்லாவற்றுக்கும் மேலாக மற்றொரு விஷயம் அவள் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. அவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவன்? மனுச ஜாதி, கடலிலே வேலை பாக்குற ஜாதி” [13]

எனத் தன்னில் சமவுடைமைக் கொண்டிருந்தாலும், சமூகத்தில் சாதி என்ற கட்டமைப்புக்குள் தள்ளப்பட்டிருப்பதை இங்கு வெளிப்படுத்துகிறது. கறுத்தம்மாவிற்கும் பழனிக்கும் திருமணம் முடிந்து விருந்து நடைபெற்றது. அங்கு சில மக்கள் பழனி என்ன சாதி என்று தெரியாததால் விருந்தை அவமதித்துவிட்டுச் செல்கின்றனர்.

“விருந்து நடந்து கொண்டிருந்த சமயத்தில், மற்றுமொரு குழப்பம் விளைந்தது. சில பெண்கள் சாப்பிடாமலே எழுந்து சென்றுவிட்டனர். பழனியின் ஜாதியைப் பற்றிய சர்ச்சை கிளம்பியதுதான் காரணம்.”[14]

எனச் சிறுவயது முதல் ஒன்றாகப் பழகியவர்கள் தன் இனத்திற்குள் வேறொரு இனத்தவரை சேர்ந்ததால் அவர்களை அடியோடு ஒழித்து விலகிச் செல்லும் மனப்பாங்கை சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.

## முடிவுரை

மீனவர்களின் வாழ்க்கையானது பழங்காலம் தொட்டு இன்றுவரை வளம் குன்றி வறுமை சூழ்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. கடலையும் கடல் சார்ந்த பொருள்களையும் மட்டுமே நம்பி இவர்களுடைய வாழ்க்கை அமைந்திருப்பதால் பிற நில மக்களிடமிருந்து வேறுபட்டவர்களாக மீனவ மக்கள் உள்ளனர். இத்தகைய மீனவர்களின் ஏழ்மையான நிலையையும் பொருளாதார ஏற்ற இறக்கங்களையும் பற்றி விரிவாக எடுத்துரைப்பதாக செம்மீன் நாவல் அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக மீனவர் சமுதாயத்தை சார்ந்த பெண்களின் நிலை மேலும் வருந்தத்ததக்கதாக அமைகிறது என்பதனை இக்கட்டுரையின் வழியாக உணர முடிகிறது. இயற்கை சீற்றங்களின் போதும் பேரிடர் காலங்களிலும் மீனவ மக்களின் வாழ்க்கை அடையும் துயரத்தினை நாம் உணர முடிகிறது. அன்றாட வாழ்க்கையில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பெண்ணடிமைத்தனம், ஆணாதிக்கம் சாதி - மதப் பாகுபாடுகள் போன்ற சமுதாயச் சிக்கல்களாலும் மீனவ சமுதாய மக்கள் அடையும் துன்பத்தினையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## References

இளம்பூரணர், தொல்காப்பியம்

எஸ். கௌமாரிஸ்வரி, கௌஎரா தமிழ் அகராதி

சீனிவாசன் இரா. மொழி ஒப்பியலும் வரலாறும்

சுந்தர ராமசாமி செம்மீன்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License